Fax 6245934

Fax MP

Ln. N. HARIHARA SUBRAMANIYAN
Founder Secretary
MY INDIA FOUNDATION
(TRUST DEDICATED TO CHILD & VILLAGE DEVELOPMENT)

☎: 6260346
Fax: 6281181

11.6.99

To The Editor
Annaneyar Times

Dinamani

ஐயா,

கார்கில் எல்லையில் 'போர்'. சமாதானத்தை குட்டிப் பிழிந்துவிட்டோம் என்று சற்றே கண்ணயர்ந்த நேரத்தை பகைவர்கள் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

1962ல் சீனாவின் படையெடுப்பும் இது போன்ற நம்பிக்கைத் துரோகமே! சீனாவின் பிரதமர் மாசேதுங் நம் நாட்டிற்கு விஜயம் செய்து நேருவுடன் கை குலுக்கி நாம் என்றும் இணைபிரியா நண்பர்களாக இருப்போம் என்று உறுதி சொன்ன இருமாதங்களுக்குள் அந்த நன்னம்பிக்கைக்கு சீனா வேட்டு வைத்தது.

இது ஒரு வித்தியாசம் தான். அப்போதும் நாம் போரை எதிர் பார்க்கவில்லை. அதைச் சந்திக்கும் திராணியிலும் நாம் இல்லை. இப்போதும் போரை எதிர்பார்க்கவில்லை. ஆனால் சந்தித்துப் பகைவரை முறியடிக்கும் சக்தியாக இருக்கிறோம்.

போரை எதிர் நோக்காத, அதனை முளையிலேயே கிள்ளி எறியாத ஒரு அசாதாரண சூழ்நிலையில் நாம் வெற்றிக்கு கொடுக்க வேண்டிய விலை மிகமிக அதிகமாக இருக்கிறது என்பதே இதில் வேதனைக்குரிய விஷயம்.

நாம் ஒவ்வொருவரும் போரின் பாதிப்பு எதுவும் இல்லாமல் தினசரி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அங்கே மிகமிகக் கடுமையான சூழலில் சுற்றிச் சூழ்ந்திருக்கும் அபாயங்களுக்கு நடுவே தன்னுயிரை துச்சமென மதித்து தாய்நாடு காப்பதற்காக இன்னுயிரைத் தந்து போராடிக் கொண்டிருக்கும் அந்த ஆயிரம் ஆயிரம் வீரர்களுக்காக நாம் என்ன செய்யப் போகிறோம்?!

1996 ல் அமெரிக்கா ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள அதி நவீன ராணுவ தளவாடங்களை பாகிஸ்தானுக்கு அளித்தது. இதற்கு ஆட்சேபம் தெரிவித்த இந்தியாவிடம் இந்த ஆயுதங்களை பாகிஸ்தான் தனது தற்காப்பிற்கு மட்டுமே பயன்படுத்தும் என்று சப்பைக்கட்டு கட்டியது. இதனை மேற்கோள் காட்டி நான் 'ஹிந்து' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் (நகல் இணைப்பு) நம் நாடு முப்படையையும் நவீனமயமாக்க வேண்டிய நிர்பந்தத்தையும், நாட்டின் தளவாட உற்பத்தித் திறன் மேம்பாட்டையும் விளக்கி எழுதினேன். மற்றும் அதை ஒட்டிய அவசியத்தையும் செலவுகளுக்காக இதற்கு ஆகக் கூடிய உதவ 'நாட்டுப் பாதுகாப்பு நிதி' (NATIONAL DEFENCE FUND) ஒன்றை ஏற்படுத்துமாறும் அதற்கு கொடுக்கப்படும் தொகை மற்றும் பொருளுக்கு முழு வரிச்சலுகைகள் அளிக்குமாறும் அரசிடம் கேட்டுக் கொண்டேன். அத்தகைய பாதுகாப்பு நிதியை பிரகடனப் படுத்த வேண்டிய தருணம் இப்போது வந்து விட்டதாகவே கருதுகிறேன்.

உடனடியாக நாம் யாவரும் செய்ய வேண்டிய காரியம் இது தான். அவரவர்கள் தங்கள் சக்திக்கு ஏற்ப, குறைந்தது தங்களது ஒரு நாள் சம்பாத்தியமோ அல்லது லாபத்தையோ இப்பாதுகாப்பு நிதிக்குத் தந்து தாய் நாட்டைக் காப்பதற்கும் — அதற்காக பாடுபடும் பாரத வீரர்களுக்கு நாங்கள் உங்களுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்கிறோம். நீங்கள் உங்களது உயரிய பணியில் வெற்றி பெற எங்களது ப்ரார்த்தனைகளையும் நல் வாழ்த்துக்களையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம் என்று உறுதி காணிக்கையாக்குவோம். இது நமது தாய்நாட்டிற்கும் அதன் தவப்புதல்வர்களான வீரர்களுக்கும் நாம் செய்யும் ஒரு சிறு தொண்டும் கடமையுமாகும்.

திகார் ஜெயிலில் இருக்கும் பத்தாயிரம் இந்தியப் பிரஜைகள் அனைவரும் சேர்ந்து தங்களது சேமிப்பிலிருந்து ரூபாய் ஒரு லட்சத்தை நாட்டைக் காக்க பிரதமரிடம் கொடுத்து கார்கிலுக்கு துப்பாக்கி ஏந்திச் செல்லத் தயார் என்று வீரமுழக்கமிட்டு நமக்கெல்லாம் முன் மாதிரியான ஒரு அற்புதக் காரியத்தை செய்துள்ளார்கள். (தினமணி 8.6.99)

வாருங்கள்; வழங்குங்கள்; ப்ரார்த்தனை செய்யுங்கள். நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், போரின் வெற்றிக்காகவும் செய்யப்படும் இப்ப்ரார்த்தனை ஒவ்வொரு இதயத்திலும், வீட்டிலும், கோவிலிலும், தர்க்காக்களிலும், சர்ச்சுகளிலும் குருத்துவாராக்களிலும் ஒலிக்கட்டும்.

ஊடுருவல்காரர்கள் அத்தனை பேரையும் அழித்து, அழித்து விரட்டியபின் தான் இப்போர் ஓயும். ஆனால் POK என்ற ஒரு தீராத நிலப்பரப்பு நம்மை ஒட்டி இருக்கும் வரை தொல்லைகள் ஓயப் போவதில்லை.

இது இந்தியாவிற்கு முழுவெற்றித் தருணம்.

ஜெய்ஹிந்த்.